முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்
முன்னிலை: திரு. என். ராமகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, சேலம்.

2024–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16– ம் நாள் திங்கட்கிழமை

இடைநிலை மனு எண். 07/2024
in
இடைநிலை மனு எண்.05/2023
in
அசல் வழக்கு எண்.329/2020

ஹரிகரபிரபு ... மனுதாரர்/மனுதாரர்/ முதல் பிரதிவாதி

//எதிர்//

மாணிக்கராஜ் ... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/ வாதி

இந்த மனு 09.12.2024 ம் தேதி என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. T.ரங்கநாதன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.நடராஜன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில்_இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:–

உத்தரவு

மனுதாரர்/ முதல் பிரதிவாதி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 148–ன்கீழ் இடைநிலை மனு எண்.5/2023–ல் கடந்த 07.11.2024 ம் தேதிக்குள், எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.2500/– படி செலுத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்ததை தொகை செலுத்த முடியாததை மன்னித்து இரண்டு அல்லது ஒருவார

கால அவகாசம் நீட்டிக்க கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

2. <u>மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையுறுதி ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு:-</u>

மனுதாரர் அசல் வழக்கில் முதல் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கானது தாவா சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நீதிமன்றம் இடைநிலை மனு எண்.5/2023 என்ற மனுவில் 07.11.2024-ம் தேதிக்குள் ரூ.2500/-ஐ எதிர்மனுதாரர்/வாதிக்கு செலுத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்படி 07.11.2024-ம் தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பாக மனுதாரர் மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருந்து, சித்த மருத்துவ முறையில் எடுத்து வந்தார். அதன் பின்னர் 14.11.2024-ம் தேதி மனுதாரர் தனது வழக்கறிஞரை சந்தித்தபோது வழக்கின் விவரங்களை மனுதாரரின் வழக்கறிஞர் கூறியுள்ளார். அப்போதுதான் வழக்கின் விவரங்கள் மனுதாரருக்கு தெரிய வந்தது. மேற்கண்ட காரணத்தினால்தான் மனுதாரரால் தொகை செலுத்த இயலாமல் போய்விட்டது. இந்த செயல் வேண்டும் என்றே ஏற்பட்டது அல்ல. மனு அனுமதிக்கப்படவில்லை என்றால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டு விடும். எனவே மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு:-</u>

மனு சட்டப்படியும் பொருண்மைகள்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் ஒப்புக் கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே

நிரூபிக்க வேண்டும். மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை ஆகும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது 07.11.2024 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் காலம் கடந்து 25.11.2024-ம் தேதியன்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே கால தாமதமாக தாக்கல் செய்யப்பட்ட இம்மனு ஏற்கத்தக்கதல்ல. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இருதரப்பிலும் வாய் மொழி சாட்சியம் அளிக்கவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:-

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. தீர்வு:-

மனுதாரர்/ முதல் பிரதிவாதி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 148-ன்கீழ் இடைநிலை மனு எண்.5/2023-ல் கடந்த 07.11.2024 ம் தேதிக்குள், எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.2500/- படி செலுத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்ததை தொகை செலுத்த முடியாததை மன்னித்து இரண்டு அல்லது ஒருவார கால அவகாசம் நீட்டிக்க கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

7. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் இந்நீதிமன்றம் இடைநிலை மனு எண்.5/2023 என்ற மனுவில் 07.11.2024-ம் தேதிக்குள் ரூ.2500/-ஐ எதிர்மனுதாரர்/வாதிக்கு செலுத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், மேற்படி 07.11.2024-ம் தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பாக

மனுதாரர் மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருந்து, சித்த மருத்துவ முறையில் எடுத்து வந்தார் என்றும், அதன் பின்னர் 14.11.2024–ம் தேதி மனுதாரர் தனது வழக்கறிஞரை சந்தித்தபோது வழக்கின் விவரங்களை மனுதாரரின் வழக்கறிஞர் கூறினார் என்றும், அப்போதுதான் வழக்கின் விவரங்கள் மனுதாரருக்கு தெரிய வந்தது என்றும், மேற்கண்ட காரணத்தினால்தான் மனுதாரரால் தொகை செலுத்த இயலாமல் போய்விட்டது என்றும் கூறப்பட்டது. எதிர் மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில் மனு உரிய கால வரம்பிற்குள் தாக்கல் செய்யவில்லை என கூறினார்.

8. மனுதாரர்/முதல் பிரதிவாதிக்கு வழக்கில் பங்கு கொண்டு வழக்கினை நடத்துவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியமாகின்றது. மனுதாரர் தரப்பில் கூறப்பட்ட காரணங்கள் ஏற்கும் படியாக உள்ளது. மேற்கண்ட பரிசீலனைகளின் படி மனு அனுமதிக்கத்தக்கது என பிரச்சினையின் மீது தீர்வு காணப்படுகிறது.

9. முடிவில், மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்/முதல் பிரதிவாதி இ.ம.எண்.5/2023–ல் 25.10.2024–ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவுபடி தொகையை செலுத்த 03.01.2025–ம் தேதி வரை காலம் நீட்டித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16–ம் தேதியான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N RAMAKRISHNAN

Digitally signed by N RAMAKRISHNAN
Date: 2024.12.16 06:10:35 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

N RAMAKRISHNAN

Digitally signed by N RAMAKRISHNAN
Date: 2024.12.16 06:11:01 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.